A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 69 / 2023**

திரு K. முருகேசன்,
த/பெ. N.கருப்பண்ணன்,
பிலிக்கல்பாளையம், ஜேடர்பாளையம்,
ப.வேலூர் – 637 213.

………மேல்முறையீட்டாளர்
(திரு K. முருகேசன்)

எதிர்

செயற்பொறியாளர்/இ&ப/ ப.வேலூர்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பை பாஸ் ரோடு, அபிராமி திரையரங்கம் அருகில்,
பரமத்தி வேலூர் – 638 182.

. . . எதிர்மனுதாரர்
(திரு S. வரதராஜன், செயற்பொறியாளர்/இ&ப/ ப.வேலூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 11-09-2023**

**கேட்புரை நாள்: 16-11-2023**

**ஆணை நாள்: 22-11-2023**

11.09.2023 அன்று பெறப்பட்ட திரு K. முருகேசன், த/பெ. N.கருப்பண்ணன், பிலிக்கல்பாளையம், ஜேடர்பாளையம், ப.வேலூர்-637213 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 69/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 16.11.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது நிலத்தின் வழியாக செல்லும் மின்பாதையை தனக்கு எந்தவித செலவும் இல்லாமல் மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனக்கு சொந்தமான பட்டா நிலத்தில் அமைந்துள்ள மின்பாதையை மாற்றி அமைக்குமாறு எதிர்மனுதாரரிடம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மின்பாதையானது மேல்முறையீட்டாளரின் பொது வாய்க்கால் வரப்பு பகுதியின் ஓரமாகத்தான் அமைக்கப்பட்டுள்ளது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 வாரிய செலவிலேயே மின்பாதையை மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் நாமக்கல் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 24.03.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், நாமக்கல் மின்பகிர்மான வட்டம் 30.05.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு :**

3.1 நாமக்கல் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.05.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *திரு.மாரியப்ப முத்துராஜா அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கியது தொடர்பாக மனுதாரரின் சொந்தமான நிலத்தில் தாழ்வழுத்த மின்பாதை மட்டும் 20 மீட்டர் தூரம் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.*

*மேலும், அளவீடு செய்யப்படும் பொழுது எவ்வித ஆட்சேபனையும் மனுதாரரிடமிருந்து பெறப்படவில்லை எனவும், விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 20 நாட்களுக்கு பிறகு தான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.*

*எனவே மனுதாரர் உரிய விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டு தொகை வாரிய விதிமுறைகளின்படி செலுத்தும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மேலும் இம்மனு எண் 57/2023-24 ஆனது இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

4.0 **மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை**:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 16.11.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு K. முருகேசன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு S. வரதராஜன், செயற்பொறியாளர்/இ&ப/ ப.வேலூர், நாமக்கல் மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:**

5.1 தனக்கு சொந்தமான பட்டா நிலத்தில் க.ச.எண்.334/1A6 நிலத்தின் நடுப்பகுதியில் தனி நபர் ஒருவரான திரு.மாரியப்பன் அவர்களுக்கு மின் இணைப்பு

வழங்குவதற்கு பயனாளியான மாரியப்பன் அவர்களின் நிலத்தின் வழியாக மின் பாதை அமைக்க மின் பாதை மற்றும் வழித்தடம் இருந்தும் தனது நிலத்தின் வழியாக மேல்முறையீட்டாளர் வெளியூர் சென்றிருந்த போது புதிய மின்பாதை அமைத்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 பயனாளியான மாரியப்பன் அவர்களின் நிலத்தில் ஏற்கெனவே ஒரு உயர் அழுத்த மின்பாதை உள்ளதாகவும், இந்த உயர் அழுத்த மின்பாதையின் அடியிலேயே தாழ்வழுத்த மின்பாதையும் கொண்டு சென்றிருக்கலாம் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 28.06.2023 நாளிட்ட கடிதம் கிடைக்கப்பெற்ற நாள் 16.08.2023. தன் நிலத்தில் மின் பாதையை எடுத்துச் சென்றது இல்லாமல் பயனாளியின் நிலத்தில் மாற்றியமைக்க தன்னை (DCW) மதிப்பீட்டுத் தொகை செலுத்த கூறுவதாகவும், வயதாகியும் ஏழ்மை நிலையிலும் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் தனக்கும் தன் மனைவிக்கும் மன உளைச்சலாக உள்ளதாகவும், இந்த அநீதியால் உணவு கூட உண்ண முடியவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 பகிர்மான விதி தொகுப்பின் 27ன்படி திரு மாரியப்பனிடம் தன் வழித்தடத்துக்காகவும், உரிமம் கடிதமும், கிணற்றிற்காக தடையில்லா சான்றும் மின் வாரியம் கேட்டு பெற்றிருக்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 புதிய மின்பாதை தன்னுடைய நிலத்தின் நடுப்பகுதியில் அமைந்திருப்பதால் நிலத்தின் மூன்று பக்கமும் மின்கம்பியாக இருப்பதாகவும், இதனால் நிலத்தில் சென்று விவசாயம் செய்ய முடியவில்லை எனவும், விவசாய நிலத்தின் நடுப்பகுதியில் மின்பாதை உள்ளதால் தென்னை மரங்களால் மின்பாதை சேதம் ஏற்பட்டு உயிர்சேதம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், எனவே, பயனீட்டாளர் நிலத்தில் ஏற்கெனவே உள்ள மின்பாதையின் வழியாக கொண்டு செல்லுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தனது நிலத்தில் தென்னை, சோளம் ஆகிய பயிர்கள் மட்டுமே வளர்த்து வருவதாகவும், டிசம்பர் (மார்கழி) மாதத்தில் கடும் குளிர், கடும் வெயில் இருக்கும்போது வெறும் தென்னை மரங்கள் மட்டுமே இருந்தது தென்னைக்கு தண்ணீர் 25

நாட்களுக்கு ஒரு முறை போதுமானதாகும் எனவும், தன் வீட்டிற்கும் விவசாய நிலத்திற்கும் 5 கி.மீ தூரம் மேலும் 70 வயதாகும் தன்னால் தேவைப்படும் பொழுது அதாவது 25 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் விடுவதற்கு மட்டுமே விவசாய நிலத்திற்கு செல்வதாகவும், அதனால் தனக்கு மின்பாதை அமைந்தது தெரியவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 எனவே, தயவுகூர்ந்து தனது நிலத்தின் வழியாக செல்லும் மின்பாதையை பயனீட்டாளர் நிலத்தில் ஏற்கனவே செல்லும் மின்பாதை வழியாக தனக்கு எந்தவித செலவும் இல்லாமல் மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் கேட்டு கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 பிலிக்கல்பாளையம் பிரிவிற்குட்பட்ட பிலிக்கல்பாளையம் கிராமம் சர்வே எண்334/1A7-ல் உள்ள கிணற்றுக்கு 1.திரு.மாரியப்ப முத்தராஜா என்பவர் சாதாரண வரிசையில் விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பதிவு செய்த விண்ணப்ப எண் EEV/A-297/2004-05 dt.29.07.2004 ஆகும் எனவும், திரு.சிவகுமார் என்பவர் பிலிக்கல்பாளையம் கிராமம் சர்வே எண்.331/1B2-ல் உள்ள கிணற்றுக்கு மின் இணைப்பு வேண்டி சாதாரண வரிசையில் விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்த விண்ணப்பம் எண் EEV/A-732/2004-05, dt.14.02.2005 எனவும், மேற்படி இரண்டு நபர்களுக்கும் 2021-22 ஆம் ஆண்டு குறியீட்டின்படி தயார்நிலை பதிவு செய்ததின் அடிப்படையில் இருவருக்கும் திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுமதி பெறப்பட்டு 10.11.2022 அன்று மின்பாதைகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு மற்றும் 7.12.2022 அன்று மின்மாற்றி பொருத்தப்பட்டு 26.12.2022 அன்று இருவருக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்படி இரண்டு மின் இணைப்புகளுக்கும் மின் மாற்றி மற்றும் மூன்று தாழ்வழுத்த கம்பங்கள் அமைத்து மின் இணைப்புகள் வழங்கப்பட்டதாகவும், அதில் மின்மாற்றி விண்ணப்பதாரர் திரு.மாரியப்ப முத்துராஜா நிலத்தில் அமைக்கப்பட்டது முதல் இரு கம்பங்கள் திரு.சிவகுமார் அவர்களின் நிலத்திலும் மூன்றாவது கம்பம் திரு. மாரியப்ப முத்துராஜா நிலத்திலும் அமைக்கப்பட்டு மின்பாதையானது வரப்பிற்குமேல் தாழ்வழுத்த

மின்பாதை மட்டும் சுமார் 20 மீட்டர் தூரம் மேல்முறையீட்டாளர் திரு. K.முருகேசன் அவர்களின் நிலம் என தெரிவிக்கப்படும் நிலத்தின் வரப்பிற்குமேல் ஓரமாக கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேற்படி மின் இணைப்பு கொடுப்பதற்காக மதிப்பீடு தயார் செய்ய மேற்கொள்ளும்போதும், விஸ்தரிப்பு பணி மேற்கொள்ளும்போதும் எந்த ஒரு ஆட்சேபனையும் செய்ய அளவீடு பெறப்படவில்லை எனவும், மேலும் 10.11.2022 அன்று மின்பாதைகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டும் மற்றும் மின்மாற்றி 07.12.2022 அன்று பொருத்தப்பட்டு சார்ஜ் செய்து சுமார் 20 நாட்களுக்கு பிறகு 26.12.2022 அன்று திரு.மாரியப்ப முத்துராஜா அவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டதாகவும், இந்த காலகட்டத்தில் எவ்வித ஆட்சேபனையும் பெறப்பட்டவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேற்குறிப்பிட்ட இரண்டு விண்ணப்பதாரர்களுக்கும் மின் இணைப்பு வழங்க மதிப்பீடு தயார் செய்யும் பொழுது அருகில் தாழ்வழுத்த மின்பாதை இல்லாத காரணத்தால் புதியதாக ஒரு மின்மாற்றி அமைக்கும் சூழல் ஏற்பட்டதாகவும், அந்த சமயத்தில் விண்ணப்பதாரர்களில் ஒருவரான திரு.மாரியப்ப முத்துராஜா அவர்கள் அவரது நிலத்தினுள் செல்லும் 11KV உயர் மின்னழுத்த மின்பாதையில் online–Single Pole DT 16KVA அமைக்க அவர் சம்மதமும் இடமும் கொடுக்க முன்வந்ததாலும், வாரியத்திற்கு குறைந்த செலவில் மதிப்பீடுகள் தயார் செய்யும் நோக்கிலும் மற்றும் இரண்டு கிணறுகளும் அமைந்துள்ள இடங்களை ஆராய்ந்து தொழிலநுட்ப ரீதியாகவும் (Technical Feasibility) அவ்வாறான மதிப்பீடு தயார் செய்து அனுமதி பெறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 அவ்வாறு, மதிப்பீடு செய்யும்பொழுது விண்ணப்பதாரர் திரு.மாரியப்ப முத்துராஜா அவர்களின் தரப்பில் LOC P2 to P3 வரை (மதிப்பீட்டில் கண்டுள்ளபடி) தாழ்வழுத்த மின்பாதை கொண்டு செல்ல எவ்வித ஆட்சேபனையும் ஏற்படாது என்றும், மேற்படி கிணற்றிற்கு வரப்பின் வழியாக நடந்து செல்ல பாத்தியம் உள்ளது என்றும் வாய்மொழியாக தெரிவித்துள்ளதாகவும், மேலும் வருவாய் துறை ஆவணங்களின்படியும், சர்வே எண் 334/1A72–ல் உள்ள கிணறு அடங்கிய நிலம் பட்டா எண்:1081 ன் படி கூட்டு பட்டாவாகவே இருந்து வருவதையும் அறிய முடிந்தது. எனவே மேற்கண்ட நிலைகளின்

அடிப்படையிலேயே மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு மின் இணைப்புகள் வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மனுதாரர் 24.03.2023 அன்று மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட மனுவானது தலைவர், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் நாமக்கல் மின் பகிர்மான வட்டம் நாமக்கல் அவர்களால் 30.05.2023 அன்று விசாரணை செய்யப்பட்டு 28.06.23 அன்று மனுதாரரோ அல்லது மின் இணைப்பு உரிமையாளரோ மின்பாதையை மாற்றியமைக்க உரிய விண்ணப்பம் (DCW) அளிக்கும் பட்சத்தில் வாரிய விதிப்படி மின்பாதையை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மன்றத்தில் ஆணை வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 புதிய மின் பாதை கொண்டு செல்லும் நிலமானது கூட்டாக பாத்தியப்பட்டது என்று கூட்டு உரிமையாளர் திரு.மரியப்ப முத்தராஜா அவர்கள் கூறியதின் அடிப்படையில் பினைமுறிவு பத்திரம் பெறப்பட்டுள்ளதாகவும், மின்பாதையானது முருகேசன் அவர்களின் பொது வாய்க்கால் வரப்பு பகுதியில் ஓரமாகதான் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மின்பாதைகள் அமைக்கப்படும்போது தென்னை மரங்கள் எதுவும் இல்லை, தற்போது புதியதாக தென்னை மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேற்படி சர்வே எண் 334/1A72 –ல் திரு.மாரியப்ப முத்துராஜா அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட கிணற்றில் மேல்முறையீட்டாளர் திரு.முருகேசன் அவர்களுக்கும் கூட்டு பாத்தியம் உள்ளது என்பதும் குறிப்பிடதக்கது. மேலும் மேல்முறையீட்டாளர் திரு.முருகேசன் அவர்களும் அதே கிணற்றிற்கு பின்னிட்டு மின் இணைப்பு கோரி விண்ணப்பித்துள்ளார் (விண்ணப்ப எண் 241032388 நாள்31.03.2023) என்பதும் பின்னாளில் அவர் ஏதேனும் ஒரு திட்டத்தில் மின் இணைப்பு கோரி விண்ணபிக்கும்பொழுது செலவினம் ஏதும் இன்றி அவருக்கும் மின் இணைப்பு வழங்க ஏதுவாகும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு K. முருகேசன், தனக்கு சொந்தமான பட்டா நிலத்தில் க.ச.எண்.334/1A6, நிலத்தின் நடுப்பகுதியில் தனி நபர் ஒருவரான திரு.மாரியப்பன் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு, பயனாளியான மாரியப்பன் அவர்களின் நிலத்தின் வழியாக மின் பாதை அமைக்க ஏற்கனவே ஒரு உயர் அழுத்த மின்பாதை உள்ளதாகவும், இந்த உயர் அழுத்த மின்பாதையின் அடியிலேயே தாழ்வழுத்த மின்பாதையும் கொண்டு சென்றிருக்கலாம் எனவும் மின் பாதை மற்றும் வழித்தடம் இருந்தும் தனது நிலத்தின் வழியாக, தான் வெளியூர் சென்றிருந்த போது புதிய மின்பாதை அமைத்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 புதிய மின்பாதை தன்னுடைய நிலத்தின் நடுப்பகுதியில் அமைந்திருப்பதால் நிலத்தின் மூன்று பக்கமும் மின்கம்பியாக இருப்பதாகவும், இதனால் நிலத்தில் சென்று விவசாயம் செய்ய முடியவில்லை எனவும், விவசாய நிலத்தின் நடுப்பகுதியில் மின்பாதை உள்ளதால் தென்னை மரங்களால் மின்பாதை சேதம் ஏற்பட்டு உயிர்சேதம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், எனவே, தனது நிலத்தின் வழியாக செல்லும் மின்பாதையை தனக்கு எந்தவித செலவும் இல்லாமல் மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் கேட்டு கொண்டுள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் பிலிக்கல்பாளையம் பிரிவிற்குட்பட்ட பிலிக்கல்பாளையம் கிராமம் சர்வே எண்334/1A7–ல் உள்ள கிணற்றுக்கு திரு.மாரியப்ப முத்தராஜா என்பவர் சாதாரண வரிசையில் விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பதிவு செய்ததாகவும், திரு.சிவகுமார் என்பவர் சர்வே எண்.331/1B2–ல் உள்ள கிணற்றுக்கு மின் இணைப்பு வேண்டி சாதாரண வரிசையில் விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்ததாகவும், மேற்படி இரண்டு நபர்களுக்கும் 2021–22 ஆம் ஆண்டு குறியீட்டின்படி தயார்நிலை பதிவு செய்ததின் அடிப்படையில் இருவருக்கும் திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுமதி பெறப்பட்டு 26.12.2022 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்படி இரண்டு மின் இணைப்புகளுக்கும் மின் மாற்றி மற்றும் மூன்று தாழ்வழுத்த கம்பங்கள் அமைத்து மின் இணைப்புகள் வழங்கப்பட்டதாகவும், அதில் மின்மாற்றி விண்ணப்பதாரர் திரு.மாரியப்ப முத்துராஜா நிலத்தில் அமைக்கப்பட்டது முதல்

இரு கம்பங்கள் திரு.சிவகுமார் அவர்களின் நிலத்திலும் மூன்றாவது கம்பம் திரு. மாரியப்ப முத்துராஜா நிலத்திலும் அமைக்கப்பட்டு மின்பாதையானது வரப்பிற்குமேல் தாழ்வழுத்த மின்பாதை மட்டும் சுமார் 20 மீட்டர் தூரம் மேல்முறையீட்டாளர் திரு. K.முருகேசன் அவர்களின் நிலம் என தெரிவிக்கப்படும் நிலத்தின் வரப்பிற்குமேல் ஓரமாக கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேற்குறிப்பிட்ட இரண்டு விண்ணப்பதாரர்களுக்கும் மின் இணைப்பு வழங்க மதிப்பீடு தயார் செய்யும் பொழுது அருகில் தாழ்வழுத்த மின்பாதை இல்லாத காரணத்தால் புதியதாக ஒரு மின்மாற்றி அமைக்கும் சூழல் ஏற்பட்டதாகவும், அந்த சமயத்தில் விண்ணப்பதாரர்களில் ஒருவரான திரு.மாரியப்ப முத்துராஜா அவர்கள் அவரது நிலத்தினுள் செல்லும் 11KV உயர் மின்னழுத்த மின்பாதையில் online–Single Pole DT 16KVA அமைக்க அவர் சம்மதமும் இடமும் கொடுக்க முன்வந்ததாலும், வாரியத்திற்கு குறைந்த செலவில் மதிப்பீடுகள் தயார் செய்யும் நோக்கிலும் மற்றும் இரண்டு கிணறுகளும் அமைந்துள்ள இடங்களை ஆராய்ந்து தொழிலநுட்ப ரீதியாகவும் (Technical Feasibility) அவ்வாறான மதிப்பீடு தயார் செய்து அனுமதி பெறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 புதிய மின் பாதை கொண்டு செல்லும் நிலமானது கூட்டாக பாத்தியப்பட்டது என்று கூட்டு உரிமையாளர் திரு.மாரியப்ப முத்துராஜா அவர்கள் கூறியதின் அடிப்படையில் பினைமுறிவு பத்திரம் பெறப்பட்டுள்ளதாகவும், மின்பாதையானது முருகேசன் அவர்களின் பொது வாய்க்கால் வரப்பு பகுதியில் ஓரமாகதான் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மின்பாதைகள் அமைக்கப்படும்போது தென்னை மரங்கள் எதுவும் இல்லை, தற்போது புதியதாக தென்னை மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 மேற்படி சர்வே எண் 334/1A72 –ல் திரு.மாரியப்ப முத்துராஜா அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட கிணற்றில் மேல்முறையீட்டாளர் திரு.முருகேசன் அவர்களுக்கும் கூட்டு பாத்தியம் உள்ளது என்பதும் குறிப்பிடதக்கது. மேலும் மேல்முறையீட்டாளர் திரு.முருகேசன் அவர்களும் அதே கிணற்றிற்கு பின்னிட்டு மின் இணைப்பு கோரி விண்ணப்பித்துள்ளார் (விண்ணப்ப எண் 241032388 நாள்31.03.2023)

என்பதும் பின்னாளில் அவர் ஏதேனும் ஒரு திட்டத்தில் மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும்பொழுது செலவினம் ஏதும் இன்றி அவருக்கும் மின் இணைப்பு வழங்க ஏதுவாகும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 மேலும், பிலிக்கல்பாளையம் பிரிவிற்குட்பட்ட பிலிக்கல்பாளையம் கிராமம் சர்வே எண்334/1A7-ல் உள்ள கிணற்றுக்கு அதன் அடிப்படையிலேயே மேற்படி மின்பாதைக்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகவும், மேல்முறையீட்டாளரின் நிலத்தில் மின்கம்பங்கள் எதுவும் நடப்படவில்லை எனவும், அவரது நிலத்தின் வழியாக சமார் 20 மீட்டர் அளவிற்கு தாழ்வழுத்த மின்பாதை மட்டும் சுமார் 22 அடி உயரத்தில் போதுமான Ground Clearance-உடன் இழுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் ஆவணங்களின் மூலம் தெரியவருவது என்னவென்றால் நிறுவப்பட்ட மின்பாதையின் அடியில் எந்தவிதமான மரங்களும் இல்லை என்பதும் மின்பாதை அமைக்கும்போது மேல்முறையீட்டாளர் எந்தவிதமான புகார் மனு அனுப்பவில்லை என்பதும் உறுதியாகிறது.

7.10 இது சம்பந்தமாக தரைப்பகுதிக்கும், மின்பாதைக்கும் உள்ள இடைவெளி குறித்த விதிமுறைகள் பற்றி அறிந்து கொள்ள நாம் CEA (measure relating to safety and electric supply) Regulations 2010 இன் 58 வது விதியை ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“58. Clearance above ground of the lowest conductor of overhead lines.-*

*(1) No conductor of an overhead line, including service lines, erected across a street shall at any part thereof be at a height of less than-*

*(i) for lines of voltage not exceeding 650 Volts - 5.8 meters*

*(ii) for lines of voltage exceeding 650 Volts but not exceeding 33 kV - 6.1 meters*

*(2) No conductor of an overhead line, including service lines, erected along any street shall at any part thereof be at a height less than-*

*(i) for lines of voltage not exceeding 650 Volts - 5.5 metres*

*(ii) for lines of voltage exceeding 650 Volts but not exceeding 33 kV - 5.8 metres*

*(3) No conductor of an overhead line including service lines, erected elsewhere than along or across any street shall be at a height less than –*

| | |
|---|---|
| *(i) for lines of voltage up to and including 11,000 Volts, if bare* | *- 4.6 metres* |
| *(ii) for lines of voltage up to and including 11,000 Volts, if insulated* | *- 4.0 metres* |
| *(iii) for lines of voltage exceeding 11,000 Volts but not exceeding 33 kV"* | *- 5.2 metres* |

7.11 மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது என்னவென்றால் தரை பகுதிக்கும் நிறுவப்பட்ட மின்பாதை கட்டமைப்புக்கும் இடையே உள்ள இடைவெளி (Vertical *clearance)* 5.8 *metres* (19.02 feet) இருக்க வேண்டும் என்றும் தெரிய வருகிறது.

7.12 மேல்முறையீட்டாளர் தன்னுடைய விவசாய நிலத்தின் நடுப்பகுதியில் மின்பாதை உள்ளதால் தென்னை மரங்களால் மின்பாதை சேதம் ஏற்பட்டு உயிர்சேதம் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக நாம் அறிவது மேல்முறையீட்டளாரின் நிலத்தில் மின்கம்பங்கள் எதுவும் நடப்படவில்லை எனவும், அவரது நிலத்தின் வழியாக சமார் 20 மீட்டர் அளவிற்கு தாழ்வழுத்த மின்பாதை மட்டும் சுமார் 22 அடி உயரத்தில் இழுக்கப்பட்டதும் தெரியவருகிறது. இது பாதுகாப்பு விதியில் கூறப்பட்ட இடைவெளியை விட அதிகமாக உள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் நிலத்திற்கும் மின் பாதைக்கும் உள்ள இடைவெளி பாதுகாப்பு சேமவிதிமுறைகளின்படி பாதுகாப்பாகவும் போதிய இடைவெளியுடன் இருப்பதும் தெரியவருகிறது.

7.13 மேலும், இவ்வழக்கு சம்பந்தமாக மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்குள்ள 1985 காலகட்டத்தில் உள்ள அதிகார விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன்.

7.14 இந்திய மின்சார சட்டம், 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள்

மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"51. Exercise in certain cases of powers of telegraph authority. –***

*Notwithstanding anything in Sections 12 to 16 (both inclusive) and Sections 18 and 19, the State Government may, by order in writing, for the placing of electric supply-lines, appliances and apparatus for the transmission of energy or for the purpose of telephonic or telegraphic communications necessaryfor the proper co-ordination of works, confer upon any public officer, licensee or any other person engaged in the business of supplying energy to the public under this Act, subject to such conditions and restrictions (if any) as the State Government may think fit to impose, and to the provisions of the Indian Telegraph Act, 1885 (13 of 1885), any of the powers which the telegraph-authority possesses under that Act, with respect to the placing of telegraph lines and posts for the purposes of a telegraph established or maintained by the Government or to be so established or maintained."*

7.15 மின்சார சட்டம் 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஆராய விரும்புகிறேன்.

***"Part III***
***Power to Place Telegraph Lines and Posts***
***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*

2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*

3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*

4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full*

*compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers. "*

7.16 மேற்கண்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–இன் பிரிவு 10–இன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விதிமுறைகளின்படி உரிமதாரர் மின்பயன் பெற உரிமை கோரும் நுகர்வோருக்கு மின்பாதை அமைக்க உரிமையுள்ளது என தெரியவருகிறது.

7.17 மேலும், இது சம்பந்தமாக மின்சார சட்டம், 2003–இன் 68 (1), (2)(a) மற்றும் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 29(6) –ஐ ஆராய விரும்புகிறேன்.

***68. Overhead lines***

*(1) An overhead line shall, with prior approval of the Approprite Government, be installed or kept installed above ground in accordance with the provisions of sub-section (2).*

*(2) The provisions contained in sub-section (1) shall not apply-*

*(a) in relation to an electric line which has a nominal voltage not exceeding 11 kilovolts and is used or intended to be used for supplying to a single consumer"*

மேற்கூறிய மின்சார சட்டம் 68(2)(a)–இன்படி ஒரு தனிநபருக்கு மின்சாரம் வழங்கும் நேர்வில் 11 KV–க்குள் இருக்கும்பட்சத்தில் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமில்லை என தெரியவருகிறது. மேலும், மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு தாழ்வழுத்த மின்பாதையாகும்.

"***(29) Service Lines:***

*xxx*

*xxx*

*(6) The Consumer shall permit the Licensee to install all requisite equipments such as Transformers, switchgears, meters, etc., and to lay necessary cables or overhead lines and to provide connections thereto on the consumer's premises and shall also permit the Licensee to extend supply to other consumers through the cables, lines and equipments installed in the consumer's premises, provided that supply to the consumer in the opinion of the Engineer is not thereby unduly affected."*

மேற்கூறிய தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 29(6)–இன்படி நுகர்வோருக்குத் தரப்படும் மின்னிணைப்புக்குப் பேரளவு பாதிப்பு ஏதும் ஏற்படாதெனப்

பொறியாளர் கருதும் போது நுகர்வோர் மின்மாற்றிகள், இணைப்பமைப்புகள், மின்னளவிகள் போன்ற அனைத்துத் தேவைப்படும் சாதனங்களை நிறுவவும் நுகர்வோரது இருப்பிடத்துக்கு இணைப்பு தரவும் அங்கிருந்து பிற நுகர்வோர்களின் இருப்பிடங்களுக்கு இணைப்பு தரவும் தேவைப்படும் மின் வடம், மேனிலைத் தொடர் மற்றும் பிற இணைப்புகளை அமைக்கவும் உரிமதாரருக்கு இசைவு தர வேண்டும் என தெரிய வருகிறது.

7.18 மேலும், எதிர்மனுதாரரின் வாதுரையில் மேல்முறையீட்டளாரின் நிலத்தில் மின்கம்பங்கள் எதுவும் நடப்படவில்லை எனவும், மின்பாதை கொண்டு செல்ல தனிப்பட்ட முறையில் பாதையோ வழித்தடமோ இல்லாமல் அருகில் உள்ள விவசாய நிலங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்தே உள்ளதால் அவரது நிலத்தின் வரப்பிற்குமேல் ஓரமாக சமார் 20 மீட்டர் அளவிற்கு தாழ்வழுத்த மின்பாதை மட்டும் சுமார் 22 அடி உயரத்தில் போதுமான இடைவெளியுடன் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்று கொள்ளப்பட்டு மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

7.19 மேலும் மேல்முறையீட்டாளர் திரு.முருகேசன் அவர்களும் அதே திரு.மாரியப்ப முத்துராஜா அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட கிணற்றில் மின் இணைப்பு கோரி விண்ணப்பித்துள்ளதால் அவருக்கும் அதே பாதுகாப்பான கட்டமைப்பில் நிறுவப்பட்ட மின்பாதையில் மின் இணைப்பு வழங்க ஏதுவாகும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதாக தெரிகிறது.

7.20 இருப்பினும் மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்றி அமைக்க விரும்பும் பட்சத்தில் மின்பாதை இடமாற்றம் செய்ய ஆகும் மதிப்பீட்டு செலவு யாரை சாறும் என்பதை அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 6–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
> *(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

7.21 மேற்கூறிய விதியை ஆராயும்போது பாதுகாப்பாக நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்பது தெரிய வருகிறது.

8.0 <u>முடிவுரை:</u>

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி,

(i) மேல்முறையீட்டாளரின் நிலத்திற்கும் மின்பாதைக்கும் உள்ள இடைவெளி பாதுகாப்பு சேமவிதிமுறைகளின்படி போதிய இடைவெளியுடன் இருப்பது தெரியவருகிறது. மேலும் விதிமுறைகளுக்கு உட்பட்டே பணிகள் நடைபெற்றதாக தெரியவருகிறது. எனவே மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

(ii) மேலும் மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்ற விரும்பினால் தமிழ்நாடு மின் பகிர்மான விதிமுறைகளின் படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 69/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு K. முருகேசன், – By RPAD
த/பெ. N.கருப்பண்ணன், பிலிக்கல்பாளையம்,
ஜேடர்பாளையம், ப.வேலூர் – 637 213.

2. செயற்பொறியாளர்/இ&ப/ ப.வேலூர்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பை பாஸ் ரோடு, அபிராமி திரையரங்கம் அருகில்,
பரமத்தி வேலூர் – 638 182.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஜெய் சூர்யா டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் எதிரில்,
திருச்செங்கோடு ரோடு, நாமக்கல் – 637 001.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.